[1981 மார்ச் 24]

வட ஆற்காடு, சேலம் மாவட்டங்களில் மாம்பழ உற்பத்தி.

*வினா எண். 458—திரு. இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உற்பத்தியாகும் மாம்பழம் அளவு, ஆண்டுக்கு, சராசரி எத்தனை டன் ?

(ஆ) இப்பழங்களை, அந்நிய நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்ய, அரசு ஏதாகிலும் செயற்குறிப்பு வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தமிழ்நாட்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் சுமார் 67,000 டன் மாம்பழங்களும், சேலம் மாவட்டத்தில் சுமார் 6,000 டன் மாம்பழங்களும் ஆண்டின் சராசரி உற்பத்தி ஆகும்.

(ஆ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

திரு. இல. பலராமன் : துணைத் தலைவர் அவர்களே, இதைப்போன்று விவசாயப் பொருள்களை கவர்ச்சிகரமாக, விவசாயிகளின் நன்மையைக் கருதி அன்னியச்செலாவணியைப் பெறும் வகையிலும், பக்குவப்படுத்தி, டப்பாக்களில் அடைத்து, கூட்டுறவுத் துறை மூலமாக மேலை நாடுகளுக்கு அனுப்ப செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி வட ஆறகாடு, சேலம் மாவட்டங்களில் மாம்பழ உற்பத்தியைப் பற்றியதாகும். தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மாம்பழங்கள் உள் நாட்டில் செலாவணி ஆகி விடுகிறது என்ற போதிலும் உற்பத்தியில் பாதி அளவு கர்நாடகம், கேரளம் போன்ற அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப் படுகிறது. எதிர்காலத்தில் இவைகளை வெளிநாட்டிற்கு அனுப்பக்கூடிய சாத்தியக் கூறு இருக்கிறதா என்பதை அரசு ஆராயும்.

திரு. க. இரா. சின்னராசு : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக மாம்பழம் விளைச்சல் என்ன ? தருமபுரி மாவட்டத்தில் கிடைக்கிற மாம்பழத்தை வைத்து, பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடம் ஏதும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, உத்தேசம் இல்லை.

[1981 மார்ச் 24

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்திப் பெற்ற சேலத்து மாம்பழங்கள், 30 ஆயிரம் டன்கள் விளைந்த, சேலம் நகரில் இன்றைக்கு ஆறாயிரம் டன்னாகக் குறைந்திருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே இந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில், உற்பத்தியைப்பெருக்க வேளாண்மைத் துறை மூலமாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, உற்பததி குறைத்திருக்கிறதா என்பதை ஆராய்ந்து, அப்படி குறைந்திருந்தால் உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் ஏராளமாக மாம் பழங்கள் சீசனில் வருகின்றன. அதிகமாக அவ்வாறு வருகின்ற காலக்கட்டங்களிலே நல்ல விலை போவதில்லை. அவைகளை நிறுத்தி வைத்து விற்பதற்குரிய வசதிகளும் இல்லை. இதனால், வேலூர், சேலம் மாவட்டங்களில் மாம்பழ சீசன் நேரத்தில், மாம் பழங்களை கெட்டுப்போகாமல் வைத்திருந்து பிறகு விற்பதற்கான நவீன வசதிகளை உடைய கொடவுன்களை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதற்காகத் தான் உலக வங்கியின் உதவியோடு நம்முடைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் சேகரித்து, சேமித்து, கெட்டுப் போகாமல் பாதுகாப்பாக வைத்து விற்றுத் தரக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்து வருகிறது.

திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, தரமான மாம்பழங்களை உற்பத்தி செய்யும் வகையில் வீரியமுள்ள ஒட்டு மாங்கன்றுகளைத் தயாரிக்க, நாற்று பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

[முற்பகல் 9-30].

திரு. இரா. தாமரைக்கனி : வட ஆற்காடு சேலம் மாவட்டங்களில் உள்ள மாம்பழங்கள் பார்ப்பதற்குத்தான் அழகாக இருக்கும், இனிப்பாகவும், ருசியாகவும் இருக்கின்ற மாம்பழங்கள் ராஜபாளையம், ஸ்ரீ வில்லிப்புத்தூர் பகுதியில் செண்பகத்தோப்பு, உமாபட்டி, கான்சாபுரம் போன்ற இடங்களில் சப்பட்டை, பஞ்சவர்ணம் போன்ற மாம்பழங்கள் ருசியாக இருக்கும். அமைச்சர்

அவர்கள்கூட சாப்பிட்டுப் பார்த்திருக்கிறார்கள். லெட்டர் போட்டு வெளிநாடுகளிலிருந்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள். ஆகவே அரசே அதைக் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுசெய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ராஜபாளையம் மாம்பழங்களும் சுவையானவை, சேலம் மாம்பழங்களும் சுவையானவை. மாம்பழங்களுக்குள்ளே பாகுபாடு பார்க்க வேண்டாம்.

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களைத் தவிர, தர்மபுரி மாவட்டத்திலே அதிகமாக மாம்பழம் உற்பத்தியாகிறது. அப்படி உற்பத்தியாகிற மாம்பழங்களை வைத்து உணவுப் பண்டங்கள் தயாரித்து வெளிநாடுகளுக்கு தனியார்கள் ஏற்றுமதி செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்தத் தொழிலிலே பலர் இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே அரசே தனியாகவோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ நிறுவனத்தைத் தொடங்கி அவைகளைக் கொள்முதல் செய்து உணவுப் பண்டங்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கு மார்க்கட் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றி அரசு ஆராயும்.

சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் மரக்காணம் ஒன்றியம்.

*வினா எண் 459—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் வட்டம் மரக்காணம் ஒன்றியத்தை சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் ஒன்றியமாக அறிவிக்கும் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் இணைத்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் முதல் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தை மரக்காணம் ஒன்றியம் உட்பட எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.